# NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **GAB Foundation English Language Training** |
| Publication : | **Makkal Osai, Malaysia** |
| Section : | **General News** |
| Page : | **16** |
| Date : | **2 June 2012** |



## ஜிஏபி அறவாரியத்தின் ஏற்பாட்டில் ஆங்கிலப் பயிற்சி முகாம்

கோலாலம்பூர், ஜூன் 2– ஜிஏபி எனப்படும் கின்னஸ் நிறுவனம் பள்ளி ஆசிரியர்களுக்கான நான்கு நாள் ஆங்கிலப் பயிற்சி முகாமை கடந்த மே மாதம் 28ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை வெற்றிகரமாக நடத்தியது.

மலாக்கா, நெகிரி செம்பிலான், பேரா, சபா, சரவா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 70 ஆசிரியர்கள் இந்த ஆங்கில மொழி முகாமில் கலந்து கொண்டனர்.

ஆங்கிலத் திறனை ஆசிரியர்களிடையே மேம்படுத்துவது தொடர்பாக ஜிஏபி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிப்பது குறித்தும் அந்த மொழியை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் விரிவாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஜிஏபி அறவாரியத்தின் ஆங்கில மொழி முகாமை பயிற்சியாளர் ஆனந்தன் கிருஷ்ணன் வழிநடத்தினார்.

அவருடன் எமி பாலா உடனிருந்து பயிற்சியை வழிநடத்தினார்.

ஜிஏபி அறவாரியத்தின் தலைவர் டான்ஸ்ரீ சோ வா லாய் நிகழ்ச்சியில்

16ஆம் பக்கம் பார்க்க...



## ஆங்கிலப் பயிற்சி முகாம்...

16 ஆம் பக்கத் தொடர்ச்சி...

கலந்துகொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மலாக்கா, திபோங் கெமுனிங் தோட்ட தமிழ்ப்பள்ளி ஆசிரியை திருமதி ஷாலினி கூறுகையில், ஜிஏபி அறவாரியம் நடத்தும் இந்த ஆங்கில முகாம் பயிற்சி, இந்திய மாணவர்களுக்கு நல்லதோர் அடித்தளம் என்றார்.

பேரா, சுங்கை சிப்புட் மகாத்மா காந்தி கலாசாலையைச் சேர்ந்த மகேந்திரன் சாமி கூறுகையில், எங்கள் பள்ளியில் 800 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்திய மாணவர்கள் ஆங்கில மொழி தேர்வில் குறைவான புள்ளிகளைப் பெறுகிறார்கள் என்பதை அறிந்து ஆங்கிலப் பயிற்சியை ஆசிரியர்களுக்கு நடத்துகிறார்கள்.

நெகிரி செம்பிலான், பகாவ், செனாமா பள்ளியைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி, திருமதி வள்ளி கூறுகையில், தோட்டப்புறத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கிலம் பேசுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அந்த மாணவர்களுக்கு எவ்வாறு ஆங்கிலத்தைப் போதிப்பது என்பது குறித்து இந்த நான்கு நாள் பயிற்சியில் எங்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது என்று சொன்னார்கள்.

மலாக்கா அலோர்காஜாவைச் சேர்ந்த திருமதி பிரியா தர்ஷினியும் குமாரி பிரியாவும் கூறுகையில் நமது மாணவர்கள் ஆங்கிலத்தில் சிறந்து விளங்க வேண்டும். ஆங்கிலத்தைச் சுலபமாகக் கற்றுக்கொள்வதற்கு எங்களால் ஆன பணிகளைச் சிறப்பாகச் செய்வதாகக் கூறினர்.

நெகிரி செம்பிலான், ரொம்பின் டத்தோ கு. பத்மநாபன் பள்ளியைச் சேர்ந்த திருமதி லட்சுமி கூறுகையில் இதுபோன்ற கருத்தரங்குகள் மாணவர்களுக்கு நல்ல பயனைத் தரும் என்று கூறினார்.

நெகிரி செம்பிலான், ஏந்தாவ் சாகா தோட்டத்தைச் சேர்ந்த திருமதி வினா கவிதா, குமாரி பரிமளா கூறுகையில் மாணவர்களுக்கு கூடுதல் வகுப்புகள் நடத்தப்பட்டு ஆங்கிலமொழியைக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் சிறந்த நிலையை அடைவர் என்று கூறினார்.